**செய்தி வெளியீடு** **நாள் : 30.7.2025**

**சென்னையில் முதல் முறையாக வால்டாக்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டுவரும் 840 அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டு பூங்கா, விளையாட்டு மைதானம், திருமண மண்டபம், டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்கான சிகிச்சை மையம், அரசு அச்சகம் என 7 பணிகளான "ஒருங்கிணைந்த வளாகம்" பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் நேரில்ஆய்வு.**

*******

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (30.7.2025) சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய இரத்த சுத்திகரிப்பு மையம் (Kondithoppe Dialysis Centre), 840 புதிய குடியிருப்புகள் (840 Housing Tenements), புதிய சமூக நலக்கூடம் (Community Hall) மற்றும் விளையாட்டுத் திடல் (Play Ground) மேம்படுத்துதல் என **"ஒருங்கிணைந்த வளாகம்"**, மூலக்கொத்தளத்தில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம் மற்றும் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய குடியிருப்புகளுக்கான பணிகளை துரிதபடுத்தும் வகையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** வழிகாட்டுதலின்படி சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில் இருக்கின்ற மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு யாரும் நினைத்து பார்த்திராத அளவிற்கு கனவு திட்டமாக இருந்ததை நினைவாகின்ற வகையில் இதே இடத்தில் கடந்த 2024 டிசம்பர் மாதம் 4ஆம் தேதி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால்** துவக்கி வைக்கப்பட்ட பணிகள் முன்னேற்றம் குறித்து இன்றைக்கு களஆய்வினை மேற்கொண்டோம். அந்த வகையில் துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்களும், மாநகராட்சி துணை ஆணையாளர் திரு. ரவி அவர்களும், ஏனைய அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து ஆய்வினை மேற்கொண்டு இருக்கின்றோம். ஒரே இடத்தில் சொல்லுவார்கள் அனைத்து வசதிகளுடன் கூடிய பகுதி என்று அதுபோல் 700 குடியிருப்புகள் வறுமை கோட்டிற்கு கீழே வசிக்கின்ற மக்கள், சாலை ஓரம் வசிக்கின்ற மக்கள், கால்வாய் ஓரம் வசிக்கின்ற மக்களுக்கு 400 சதுர அடியும், ஒவ்வொரு வீடும் அமைக்கப்பட இருக்கின்றது.

இந்த 700 குடியிருப்புகள் பணி ஆரம்பிக்கப்பட்ட 8 மாத காலத்தில் விரைவுப் பணிகளாக 7 அடுக்கு தொட்டிருக்கின்றது. இதோடு சேர்த்து விளையாட்டு மைதானம் ஒன்று உருவாக்கப்பட இருக்கின்றது. அந்த விளையாட்டு மைதானத்தோடு இணைந்து ஒரு சமுதாய நலக்கூடம் ஒன்று உருவாக

Verified @ RealEstate™

இருக்கின்றது. அதோடு இணைந்து டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்குண்டான சிகிச்சை நிலையம் போன்றவற்றிற்காக பிரத்யேகமாக ஒரு வடிவமைப்பு உருவாக இருக்கின்றது. அதோடு மட்டுமல்லாமல் இந்த 700 குடியிருப்புகளை தவிர்த்து, மேலும் கூடுதலான இடம் மாநகராட்சியிடம் இருந்ததை தெரிவித்து **மாண்புமிகு முதல்வர் அவர்களிடம்** உத்தரவை பெற்று கூடுதலாக 140 வீடுகள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்பு வீடுகளை போன்று சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் கட்டப்பட இருக்கின்றது. ஆக மொத்தம் இங்கே 840 குடியிருப்புகள் உருவாக இருக்கின்றது. அதை நேரடியாக வந்து இங்கு கள ஆய்வினை மேற்கொண்டோம்.

ஒரே இடத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள், விளையாட்டு பூங்கா, விளையாட்டு மைதானம், திருமண மண்டபம், டயாலிசிஸ் சென்டர், மாற்றுத்திறனாளிகளுக்கான சிகிச்சை மையம், அரசு அச்சகம் என 7 பணிகள் ஒரே வளாகத்திற்குள் நடைபெறுவது சென்னையில் முதல் முறையாக இதுவாக தான் இருக்கும். இந்த பணியை அதிவேகம் கொண்டு டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிட்டு தொடர்ந்து எங்களுடைய துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களும், எங்களுடைய உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்களும், சென்னை பெருநகரத்தியினுடைய மாநகராட்சி ஆணையாளர் அன்பிற்கினிய திரு.குமரகுருபரன் அவர்களும், துணை ஆணையாளர் திரு. ரவி அவர்களும், பெருநகரத்தின் உடைய மேயர் திருமதி. பிரியா அவர்களும் இந்த மாநகராட்சியின் உடைய மாமன்ற உறுப்பினர் ஆகியோருடன் ஒருங்கிணைந்து, தினந்தோறும் முன்னேற்றப் பணிகளை கண்காணித்து வருகின்றோம். இந்த பகுதியில் இந்த திட்டம் வருகின்றபொழுது பெரிய வரப்பிரசாதமாக இந்த பகுதி அமையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலைத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மாநகராட்சி வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர்கள் (சி.எம்.டி.ஏ.) திரு.மகாவிஷ்ணு, (TNUHDB) திரு.லால்பகதூர், கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், திரு.இளம்பருதி, மாநகராட்சி மண்டல நல அலுவலர் டாக்டர் சுப்ரியா, செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு, சென்னை குடிநீர் வாரியம், மின்சாரத் துறை, மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified RealEstate TM